O.S No.147/2016

திரு.பாலசுப்பிரமணியம் (P.W-1)

02.12.2021

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை,

இந்த வழக்கு சொத்தில் 1986ம் வருடம் நீங்கள் நாகப்பனுக்கு கிரையம் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன், ஆனால் கிராம நத்தம் இடத்தை மட்டும் கிரையம் கொடுத்தேன் காலை எண் அப்போது எனக்கு தெரியாது. நீங்கள் நாகப்பனுக்கு கிரையம் கொடுத்த பூமியின் செக்குபந்தி பற்றி தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அந்த பூமிக்கு மேல்புரம், கிழபுரம், இரண்டு பக்கமும் வண்டி தடம் உள்ளது. நீங்கள் எந்த இடத்தை கிரையம் கொடுத்தீர்களோ அந்த இடத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்களா என்றால் ஆமாம். அந்த சொத்தில் பிரதிவாதிகள் முன்னர் பழைய ஓட்டு வீடும் தற்போது மாற்றம் ஷெட் போட்ட வீடும் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். 2011 வருடத்திற்கு முன்னர் பிரதிவாதிகளுடன் நீங்கள் சுமூகமாக பழகி கொண்டு வந்தீர்கள் என்றால் சரிதான். சண்முகசுந்தரம், கோதாண்டபாணி, மற்றும் கௌசல்யா ஆகியோகளின் திருமணம் நடந்தது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். சண்முக சுந்தரம் திருமணத்தில் கலந்து கொண்டீர்களா என்றால் கலந்து கொண்டேன். உங்களிடம் காட்டப்படும், சண்முக சுந்தரத்தின் திருமணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் (வழக்கில் குறியீடு செய்யப்படாத ஆவணம்)நீங்கள் இருக்கிறீர்களா என்றால் அதில் நான் இல்லை. 2011ம் வருடத்தில்தான் நீங்கள் அவிநாசி வட்டாச்சியரிடம் 59/2H என்ற காலைக்கு உங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்யக்கோரி மனு கொடுத்தீர்களா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 11, ஆவணமான 29.02.1960ம் வருட பத்திரத்தில் எந்த எந்த காலைகள் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் 25 ஏக்கர் பூமி பற்றி எழுதியுள்ளோம். காலை எண் 53, 63,67,59/2, ஆகிய காலைகள் நினைவில் உள்ளது இது தவிர மற்ற

காலைகளும் உள்ளன அது பற்றி எனக்கு சரியாக நினைவில் இல்லை. அந்த ஆவணத்தில் 59/2 ம் நம்பர் காலையை பொருத்து எவ்வளவு விஸ்தீரணம் உள்ள பூமி எழுதப்பட்டுள்ளது என்றால் 2 ஏக்கர் 47 செண்ட் என எழுதப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் நீங்கள் கூறும் அளவிற்கு விஸ்தீரணம் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணமான 14.12.1977ம் வருட பத்திரம் என்ன ஆவணம் என்றால் நானும் எனது தந்தையும் செய்து கொண்ட பாகசாசன பத்திரமாகும். அந்த பாகசாசன பத்திரத்தில் எங்களுக்கு பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டது என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1939,1960ம் ஆகிய இரண்டு ஆவணங்களை பற்றி குறிப்பிட்டு எதுவும் எழுதப்பட்டவில்லை என்றால் சரிதான். அந்த பாகசாசன பத்திரப்படி உங்கள் அப்பா கிருஷ்ணசாமிக்கு 47/2ம் நம்பர் காலையும் 63ம் நம்பர் காலையும் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களுக்கு 59/2ம் நம்பர் காலையில் மொத்தம் 6.83 இதில் தென்புரம் குறிப்பிட்ட செக்குபந்திகளுடன் 2.47ல் பொதுவில் பாதி 1.23 1/2 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தென்புரம் என்று குறிப்பிடவில்லை. என்னிடம் வாசித்து காட்டப்படும் வா.சா.ஆ 2 ஆவணத்தில் 59/2ம் நம்பர் காலையில் குறிப்பிட்டு செக்குபந்திகளுக்குட்பட்ட 2.47 பூமி என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த செக்குபந்தியில் கூறப்பட்டுள்ள பொன்னம்மாள் பூமிக்கு வடக்கு என்கிற பகுதி தற்போது க.ச.59/2F என்றால் சரிதான், அவருக்கு வேறு இடத்திலும் பூமி உள்ளது. வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள 2.47 பூமி என்பது 59/2Eல் உள்ளது என்றால் அதில் மட்டும் அல்ல 59/2H, 59/2I. 59/2E ஆகிய காலைகளிலும் உள்ளன 59/2Eல் 1.90 அளவு பூமி உள்ளது. 59/2I– யானது கிழமேல், தென்வடல் தடம்தான் என்றால் சரிதான், அந்த தடம் பொது தடம் அல்ல எங்கள் பூமி. 59/2I பூமிக்கு உங்கள் பெயருக்கு பட்டா, சிட்டா உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். 59/2Iக்கு உங்கள் பெயரில் எப்போது இருந்து பட்டா உள்ளது என்றால் UDR பட்டா வழங்கப்பட்ட காலத்திலிருந்தே

என் பெயரில் உள்ளது. UDR பட்டா வழங்கும்போது 59/2H என்ற பூமிக்கு நாகப்பன் பெயருக்கு தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 59/2H என்ற காலையில் வருவாய் துறை ஆவணங்களில் உங்கள் பெயரை எப்போது சேர்த்தீர்கள் என்றால் 2011ம் வருடம்தான் சேர்த்தோம். 59/2H காலையின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 30 செண்ட் ஆகும். உங்கள் பத்திரங்களில் எதிலுமே 66/3 ம் நம்பர் காலை எவ்வாறு உங்களுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் எனது தாத்தாவின் பூமி அப்படியே எனக்கு வந்துவிட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 ஆவணமான 1939ம் வருட பத்திரத்தில் செக்குபந்திகளில் உங்கள் பூமிக்கு 17 செண்ட் வருகிறதா என்றால் வருகிறது. அந்த ஆவணத்தில் செக்குபந்திகள் சரியாக எழுதப்படாமல் இரண்டு பகுதிகளில் கிழக்கு என்று தவறாக எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த 17 செண்ட் பூமியானது தற்போது 59/2H காலையில் கிழபுர பகுதியாக உள்ளது என்றால் சரியல்ல, அது கிழமேல் நீளியாக உள்ளது. 59/2H காலையில் உள்ள 17 செண்ட் பூமியானது கிழபுரமாக உள்ளது என்றும் மேல்புரமாக 13 செண்டும் பிரதிவாதியான நாகப்பன் வகையறாவிடம் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் 2001வருடம் நான் என் மனைவிக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ3 ஆவணத்தில் சண்முக சுந்தரம் என்பவர் உங்கள் மனைவி பெயரில் எத்தனை செண்ட் பூமி எழுதப்பட்டது என்றால் 2.47-ல் பாதி எழுதப்பட்டது அதில் மற்றொரு பாதி என்னுடைய பெயரிலும் உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் செக்குபந்தி கூறப்பட்டுள்ளதா என்றால் கூறப்படவில்லை, பொதுவில் பாதிதான் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் நீங்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளீர்களா என்றால் போட்டுள்ளேன். அந்த பத்திரத்தில் உட்பிரிவு படி 59/2A, 59/2E, 59/2H என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அதில் ஏக்கர் 1.91 என்ற பூமியானது 59/2E காலையில் உள்ளது என்றால் சரிதான். மற்றொரு பூமியானது 35 செண்டில் பொதுவில் 12 செண்ட் என்று

குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் மற்றொரு பகுதி 44 செண்ட் கூறப்பட்டுள்ளதா என்றால் சரிதான். இவை 3 சேர்ந்துதான் 59/2A, 59/2E, 59/2H என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 44 செண்டுக்கு குறிப்பிட்டு ஏதாவது பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. உங்கள் மனைவிக்கு விற்ற சண்முக சுந்தரிடம் இந்த 44 செண்ட் குறித்து ஏதாவது பத்திரம் உள்ளதா என்றால் எனது தாத்தா அவரது பெயரில் எழுதி கொடுத்த பத்திரம் உள்ளது. உங்கள் தாத்தா முத்துசாமிகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 1976ம் வருடம் இறந்தார். அவர் இறந்ததற்குண்டான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சண்முக சுந்தரத்திற்கு 1.97 செண்ட் பூமியையும், 44 செண்ட் பூமியையும் விற்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, எனக்கு இந்த பூமியின் மேல் உள்ள உரிமையும் அவருக்கும் வாரிசு என்ற உரிமையில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ஆவணத்தில் 44 செண்ட் பூமிக்கு கொடுக்கப்பட்டுள்ள செக்குபந்திகள் தவறு என்றால் சரியல்ல. 44 செண்ட் பூமிக்கு செக்குபந்திகள் உங்களால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் கூறமுடியும். 44 தென்புரம் கிழமேல் ரோடு, கிழபுரம் தென்வடல் வண்டி பாதை, மேல்புரம் தென்வடல் வண்டி பாதை, கிழபுரம் மேல்புரம் இரண்டு பக்கங்களிலும் வண்டி பாதை, வடபுரம் பழனியம்மாள், சரசம்மாள் ஆகியோர்களின் பூமி உள்ளது. நீங்கள் கூறுவது போல் 3 பக்கமும் தடம் உள்ளது பூமி அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. பொன்னுசாமிக்கு பழனியம்மாள் என்ன வேண்டும் என்றால் அவர் உடன்பிறந்தவர். அவர் அனுபவித்து வருவதால் அவர் பெயரை கூறியுள்ளேன். பொன்னுசாமி கவுண்டர் பூமிக்கு தெற்கு என்று தான் அந்த ஆவணத்தில் உள்ளது அந்த பூமி 59/2Gல் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 44 செண்டிற்கு செக்குபந்தியில் குறிப்பிட்டுள்ள தென்வடலாக செல்லும் பொது தடத்திற்கு மேற்கு என்பது 59/2I ல் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் தென்வடல் கிழக்கு என்று எழுதியுள்ளது சரியா என்றால் சரிதான். அவ்வாறு ஒரு தடமே இல்லை என்றும்

வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல, 1939 வருட ஆவணத்தின் படி அதில் தடம் உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு முன்னர் 2001ம் வருடத்திற்கு முன்னர் உள்ள அனைத்து ஆவணங்களிலும் குறிப்பிடப்படும் பூமியானது தற்போதைய 59/2E பூமியைதான் குறிக்கும் என்றால் சரியல்ல. 504/8 என்ற காலை முத்துசாமிகவுண்டர் என்பவர் மற்றொரு முத்துசாமிக்கு விற்பனை செய்து தற்போது பாக்கியம்மாள் என்பவரிடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாகப்பனுக்கு நீங்கள் விற்பனை செய்த போது 504/9 என்ற காலையை விற்பனை செய்தீர்களா என்றால் இல்லை. நீங்கள் நாகப்பன் வகையறாவிடம் கிரையம் கொடுத்த அன்றே அவரிடம் உங்கள் பெயரில் பூமி கிரையம் பெற்றீர்களா என்றால்நான் கிரையம் செய்து கொடுத்தேன் என் பெயரில் நாகப்பனிடம் இருந்து எந்த பூமியும் கிரையம் வாங்கவில்லை. உங்களுக்கு 504/7 என்ற காலையில் பூமி உள்ளதா என்றால் பூமி உள்ளது, அதை யாரிடம் இருந்து கிரையம் பெற்றீர்களா என்றால் கிரையம் பெறவில்லை, எனது தாத்தாவிடமிருந்து எனக்கு வழங்கப்பட்டது. பழைய நத்தம் 68 புதிய எண். 504/7 மற்றும் 9 ஆகியவற்றில் விற்பனை நடந்து தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 59/2Hல் உள்ள பிரதிவாதிகளின் வீடு எந்த திசையை நோக்கி பார்த்து உள்ளது என்றால் ஓட்டு வீடு கிழமேலாக உள்ளது, புதியதாக கட்டப்பட்ட தார்சு வீடு கிழமேலாக உள்ளது. தார்சு வீடு கட்டி சுமார் 14,15 வருடம் இருக்குமா என்றால் 2012ம் வருடம் தான் கட்டினார்கள். அவர்கள் அந்த வீட்டிற்கு வரி ரசீதுகள் கட்டியுள்ளார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் ஒரு போர்வெல் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல, நான்தான் போர்வெல் போட்டு விவசாயம் செய்து வந்தேன். 59/2H பூமியில் பிரதிவாதிகள் வேலி அமைத்துள்ளார்கள் என்றால் 2011ம் வருடம் வேலி அமைத்தார்கள். உங்களுக்கு 1939, 1977,1960, 2001 ஆகிய வருடங்களில் ஏற்படுத்தப்பட்ட பத்திரங்கள் மற்றும் அதில் பாத்தியப்பட்ட பூமி நீங்கள் தற்போது கேட்கும் 59/2H பூமியில் நீங்கள் கோரும் அளவிற்கு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் இந்நாள்

வரை அவர்கள் வழக்கு சொத்தை பொருத்து எந்த ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. இதே வழக்கு சொத்தை பொருத்து அ.வ எண்.616/2012 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 59/2H மற்றும் 59/2I ஆகிய காலைகளில் நாகப்பன் மற்றும் அவருடைய வகையறா வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் அதில் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நாகப்பன் வகையறா தான் செலவு செய்து போர்வெல் அமைத்துள்ளார்கள் நீங்கள் வழக்கிற்காக கூறுவது பொய் சாட்சியம் என்றால் சரியல்ல. ஊருக்கு பாத்தியப்பட்ட பொது தடத்தையே உங்களுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட பூமியாக நீங்கள் இந்த வழக்கை நடத்தி வருகிறிர்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய ஆவணங்களில் உங்கள் வசதிக்கு ஏற்ப பொய்யான செக்குபந்திகளை ஏற்படுத்தி கொண்டு தற்போது சட்டத்திற்கு புறம்பாக உரிமை கோருகீறிர்கள் என்றால் சரியல்ல. உங்கள் மனைவி வாங்கிய சொத்திற்கும் அதை விற்பனை செய்த நபருக்கும் அந்த ஆவணத்தை ஏற்படுத்த உரிமை இல்லை என்றால் சரியல்ல. நாகப்பனுக்கு நீங்கள் விற்ற சொத்தையே வேறு காலை எண் கூறி தற்போது உரிமை கோருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரும் அந்த இடத்தை சரிவர பார்க்காமல் அளவீடு செய்யாமல் அறிக்கை அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நீங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கககூடியதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S/d....M.Afzal Fathima
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.